FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8301685

ஊ.த.கபிரிவு

1. District : மாவட்டம் நாகப்பட்டினம் PS: காவல்நிலையம் நாகப்பட்டினம் Year: ஆண்டு 2026 FIR No.: 8/2026 முத.அ. எண் Date: நாள் 28.08.2026

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act, Sections பிரிவுகள்: 7 of the P.C. Act, 1988 as
(ii) Act சட்டம்: 1988 as amended by the P.C. Sections பிரிவுகள்: amended by the P.C.
(iii) Act சட்டம்: (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்: (Amendment) Act, 2018
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 27.08.2026 Date from : நாள் முதல் Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 15.15 hrs Time to : நேரம் வரை 21.30 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28.08.2026 Time : நேரம் 10.00 hrs 14.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 28.08.2026 Time : நேரம் 10.00 hrs 14.00 hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி 3 கி.மீ. வடக்கு, நாகப்பட்டினம் மாவட்டம் நாகப்பட்டினம் வட்டாட்சியர் அலுவலகம்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.M.குணசேகரன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் முத்துக்குமரர்.
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 52/2026 (d) Nationality : நாட்டினம் இந்தியர் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் மாவட்ட ஆய்வுக்குழுமுகவரி ஆய்வாளர் (g) Address : மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், தஞ்சாவூர், தஞ்சாவூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

(1) திரு.க.ராஜ்குமார், வட்டாட்சியர், நாகப்பட்டினம், (2) திரு.எம்.கிருஷ்ணன், மண்டல துணை வட்டாட்சியர், வட்ட அலுவலகம், நாகப்பட்டினம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- வாதியால் தாமதம் -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்பிக்கப்படுகிறது :- இன்று 28.08.2026 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் கரமேஷ் குமார் ஆகிய நான் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்தபோது திரு.Mகுணசேகரன், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், தஞ்சாவூர் என்பவர் கொடுத்த புகார் அறிக்கையின்மீது வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு. அனுப்புநர், Mகுணசேகரன், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், தஞ்சாவூர் பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாகப்பட்டினம். அய்யா, தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளராகிய நான் இரகசிய தகவலின்படி நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் சேர்ந்து நாகப்பட்டினம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நாகப்பட்டினம் வட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலக அலுவலர்கள் பிறப்பு இறப்பு சான்று பெற வரும் நபர்களிடமும், வண்டல் மண் எடுக்க அனுமதி வேண்டி வரும் விண்ணப்பதாரர்களிடமும், பட்டா மாற்றம், உட்பிரிவு மற்றும் நிலஅளவை தொடர்பான விண்ணப்பித்துள்ள நபர்களிடமும் மற்றும் நாகப்பட்டினம் வட்ட வருவாய் ஆய்வாளர்களிடம், கிராம நிர்வாக அலுவலர்களிடமும் கையூட்டு கேட்டு பெறுவதாகவும் மற்றும் இதர பணிகளுக்காக வரும் பொதுமக்களிடம் கையூட்டு கேட்டுப்பெறுவதாகவும், நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு

(தனிநாள்குறி இரவண நிகழ்ந்ததாக)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் தகவல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

28.8.2026

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 28.8.2026 15.00hrs

Name: பெயர் Tr. RAMESH KUMAR
Rank: நிலை Inspector of Police
Vigilance & Anti-Corruption
Nagapattinam

நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.08/2026 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:

அலுவலகத்திற்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் 27.08.2026 ஆம் தேதி மாலை 15.15 மணி முதல் இரவு 21.30 மணி வரை மேற்படி நாகப்பட்டினம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.கரமேஷ் குமார் மற்றும் அவரது குழுவினருடன் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டபோது திரு.கராஜ்குமார், வட்டாட்சியர் நாகப்பட்டினம் என்பவரது செல் எண். 9943851954 ஐ சோதனை செய்த போது அவரது "G" Pay கணக்கிற்கு 01.03.2026 முதல் 27.08.2026 வரை திரு.குமரன், துணை வட்டாட்சியர், தேர்தல் பிரிவு, வட்ட அலுவலகம், நாகப்பட்டினம்(செல் எண் 9095423419), திரு.நிவாஸ் (செல் எண் 8825580420), திரு.ராமலிங்கம் (செல் எண் 8124354599) மற்றும் சிலரது கணக்கிலிருந்து மொத்தம் ரூபாய் 1,92,538/- பணம் வந்துள்ளது. அதேபோல் திரு.எம்.கிருஷ்ணன், மண்டல துணை வட்டாட்சியர் என்பவரது செல் எண்.7200666807 ஐ சோதனை செய்த போது அவரது "G" Pay கணக்கிற்கு 16.10.2025 முதல் 27.08.2026 வரை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர்களின் கணக்கிலிருந்து மொத்தம் ரூபாய் 1,20,250/- பணம் வந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டது. மேற்கண்ட தொகை நாகப்பட்டினம் வட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலக அலுவலர்கள் பிறப்பு இறப்பு சான்று பெற வரும் நபர்களிடமும், வண்டல் மண் எடுக்க அனுமதி வேண்டி வரும் விண்ணப்பதாரர்களிடமும், பட்டா மாற்றம், உட்பிரிவு மற்றும் நிலஅளவை தொடர்பான விண்ணப்பித்துள்ள நபர்களிடமும் மற்றும் நாகப்பட்டினம் வட்ட வருவாய் ஆய்வாளர்களிடம், கிராம நிர்வாக அலுவலர்களிடமும் குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டு கேட்டு பெற்றதாக கருதி அதன் விபரம் திடீர் ஆய்வு நடவடிக்கைகள் மகஜரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது சம்மந்தமாக தயாரிக்கப்பட்ட திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கை மகஜருடன், மகஜரில் கண்டபடி (1) பட்டா மாற்றத்திற்காக 66 மனுக்களும், பட்டா உட்பிரிவுக்காக 141 மனுக்களும் நிலுவையில் உள்ளதாக அதுதொடர்பான மனுக்களின் விவரங்களை கணினியில் பதிவிறக்கம் செய்து வட்டாட்சியர் சான்றொப்பமிட்ட 3 பக்க அறிக்கை, (2) வண்டல் மண் எடுக்க அனுமதி கொடுப்பது தொடர்பாக 37 நபர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்ட விபரமும், 87 நபர்களுக்கு அனுமதி மறுத்த விபரமும், 91 நபர்களுக்கு அனுமதி நிலுவையிலுள்ள விபரமும் கொண்ட வட்டாட்சியர் சான்றொப்பமிட்ட 8 பக்க அறிக்கை, (3) எல்லை நில அளவீடு தொடர்பாக ஊரக புல எல்லை அளத்தல் தொடர்பான 142 மனுக்களும், நகர்புர குடியிருப்பு பகுதியில் 63 மனுக்களும் நிலுவையிலுள்ளது தொடர்பான வட்டாட்சியர் சான்றொப்பமிட்ட 2 பக்க அறிக்கை, (4) சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 45 மனுக்கள் நிலுவையிலுள்ளது தொடர்பான தனிவட்டாட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) சான்றொப்பமிட்ட 2 பக்க அறிக்கை, (5) புதிய குடும்ப அட்டை தொடர்பான 583 மனுக்களும், உறுப்பினர் சேர்க்கைக்காக 34 மனுக்களும், குடும்ப தலைவர் உறுப்பினர் மாற்றத்திற்காக 15 மனுக்களும், குடும்ப உறுப்பினர் நீக்கத்திற்காக 39 மனுக்களும் நிலுவையிலுள்ளது தொடர்பான வட்ட வழங்கல் அலுவலர் சான்றொப்பமிட்ட 1 பக்க அறிக்கை, (6) நாகப்பட்டினம் வட்டாட்சியர் அலுவலக 2026 ஆம் ஆண்டு வருகை பதிவேடு, (7) நாகப்பட்டினம் வட்டாட்சியர் அலுவலக தனிநபர் ரொக்க பணம் கையிருப்பு பதிவேடு 2026 மற்றும் (1) திரு.கராஜ்குமார், வட்டாட்சியர், நாகப்பட்டினம், (2) திரு.எம்.கிருஷ்ணன்,

மண்டல துணை வட்டாட்சியர், வட்ட அலுவலகம், நாகப்பட்டினம் ஆகியோர்களை விசாரணை செய்து பதிவு செய்த வாக்குமூலங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்து ஆஜர் படுத்துகிறேன். மேற்படி (1) திரு.க.ராஜ்குமார், வட்டாட்சியர், நாகப்பட்டினம், (2)திரு.எம்.கிருஷ்ணன், மண்டல துணை வட்டாட்சியர், வட்ட அலுவலகம், நாகப்பட்டினம் ஆகியோரின்மீது உரிய சட்டப்படியான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம்- M.குணசேகரன் 28/7/2026 (M.குணசேகரன்) ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், தஞ்சாவூர். திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் இன்று 27.07.2026 ஆம் தேதி மாலை சுமார் 15.15 மணிமுதல் நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் வட்டாட்சியர் அலுவலகத்தை திரு.M.குணசேகரன், த/பெ. முத்துக்குமரன், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருகரமேஷ் குமார் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலர்கள் உதவியுடன் மேற்கொள்ளும் திடீர் ஆய்வின் செயல்முறை நடவடிக்கைகள் குறித்து தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.M.குணசேகரன் அவர்களால் தயார் செய்யப்படும் திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் மகஜர் விபரம் பின்வருமாறு. நாகப்பட்டினம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நாகப்பட்டினம் வட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலக அலுவலர்கள் பிறப்பு இறப்பு சான்று பெற வரும் நபர்களிடமும், வண்டல் மண் எடுக்க அனுமதி வேண்டி வரும் விண்ணப்பதாரர்களிடமும், பட்டா மாற்றம், உட்பிரிவு மற்றும் நிலஅளவை தொடர்பான விண்ணப்பித்துள்ள நபர்களிடமும் மற்றும் நாகப்பட்டினம் வட்ட வருவாய் ஆய்வாளர்களிடம், கிராம நிர்வாக அலுவலர்களிடமும் கையூட்டு கேட்டு பெறுவதாகவும் மற்றும் இதர பணிகளுக்காக வரும் பொதுமக்களிடம் கையூட்டு கேட்டுப்பெறுவதாகவும், நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இன்று 27.08.2026 ஆம் தேதி தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரிடம் தகவல் தெரிவித்ததன்பேரில், நான் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு இன்று மதியம் 14.30 மணிக்கு சென்றபோது, காவல் ஆய்வாளர் திருகரமேஷ் குமார் அவர்கள் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த மேற்படி இரகசியதகவலினை தெரிவித்தும், நாகப்பட்டினம் மாவட்டம் நாகப்பட்டினம் வட்டாட்சியர் அலுவலகத்தை திடீர் ஆய்வு செய்யவேண்டியதன் அவசியத்தையும் கூறியதன் அடிப்படையில், அங்கிருந்து நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.க.ரமேஷ் குமார் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்கள் சகிதம் அரசு வாகனத்தில் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து இன்று 27.08.2026 ஆம் தேதி 15.00 மணியளவில் புறப்பட்டு, நாகப்பட்டினம் மாவட்டம் நாகப்பட்டினம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு 15.15 மணியளவில் வந்து, நாகப்பட்டினம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்த திருகராஜ்குமார், வட்டாட்சியர் நாகப்பட்டினம் மற்றும் அலுவலர்களிடமும் மற்றும் அலுவலகத்தில் இருந்தவர்களிடமும் திடீர் ஆய்வு விபரம் பற்றி தெரிவித்து திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட விபரம் பின்வருமாறு. மேற்படி நாகப்பட்டினம் வட்டாட்சியர் அலுவலகமானது, நாகப்பட்டினம் to நாகூர் மெயின் ரோட்டில் ரோட்டிற்கு கிழக்குபுறம் உள்ள நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் வளாகத்தின் முதல் நுழைவு வாயிலின் அருகே வடக்குபக்கம் திறந்த வெளியை அடுத்து அமைந்துள்ள

நாகப்பட்டினம் வட்டாட்சியர் அலுவலக கட்டிடத்தின் கிழக்கு பக்கம் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்தும் கார் செட்டும், முதல் தளத்துடன் கூடிய RCC கட்டிடத்தின் முன்புறம் போர்ட்டிக்கோவும், நுழைவாயிலை அடுத்து வராண்டாவும், வராண்டாவின் வலதுபுறம் இ-சேவைமையமும், அதற்கு அடுத்தாற்போல் ஆவணங்கள் வைப்பறையும் உள்ளது. வராண்டாவிற்கு வடக்கு பக்கம் மாடிக்கு செல்லும் படிக்கட்டுகளும், வரண்டாவுக்கு தென்புறம் சமூக பாதுகாப்பு திட்ட தனிவட்டாட்சியரின் அலுவலக அறையும், வராண்டாவின் மேற்கு பக்கம் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் மற்றும் மண்டல துணை வட்டாட்சியர் இருக்கைகளும், அவர்களுக்கு மேற்கு பக்கம் தடுப்புகளுடன் கூடிய வட்டாட்சியர் அலுவலக அலுவலர்களின் இருக்கைகளும், அந்த அலுவலக அறைக்கு தெற்குபக்கம் வட்டாட்சியர் அறையும், கணினி அறையும் அமைந்துள்ளது. முதல் தளத்தில் மாடிப்படியின் எதிர்புறம் கூட்ட அரங்கும், அதற்கு மேற்கு பக்கம் ஒரு பெரிய ஹாலும், அந்த ஹாலின் வடக்கு பக்கம் வட்ட வழங்கல் அலுவலர்களின் இருக்கையும், அந்த ஹாலுக்கு தெற்கு பக்கம் சமூக பாதுகாப்பு தனி வட்டாட்சியர் அறையும், வட்ட வழங்கல் அலுவலரின் அறையும், நிலஅளவை பிரிவு அறையும், வட்ட துணை ஆய்வாளர் நிலஅளவை அவர்களின் அறையுமாக உள்ளது. முதல் தளத்தின் கிழக்கு பக்கம் தேர்தல் பிரிவு துணை வட்டாட்சியர் அறையுமாக உள்ளது. மாடிப்படிகட்டுகளுக்கு பின்புறம் தரைதளத்திலும் முதல் தளத்திலும் கழிவறைகள் அமைந்துள்ளது. மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினர் வட்டாட்சியர் அறைக்குச் சென்று வட்டாட்சியர் திரு.கராஜ்குமார் அவர்களிடமும், அந்த அறையில் இருந்தவர்களிடமும் தன்னையும், குழுவினரையும் அறிமுகம் செய்து கொண்டு, அலுவலகத்தில் இருந்த அனைவரிடமும் திடீர் ஆய்வு பற்றி விவரம் தெரிவித்து, அலுவலகத்தில் இருந்த அனைத்து அலுவலர்களையும், அலுவலகத்தில் இருந்த பொதுமக்களையும் தனித்தனியாக விசாரணை செய்து, சோதனை செய்தும், அலுவலகத்தையும் சோதனை செய்யப்பட்டது. வட்டாட்சியர் அறையில் இருந்த வட்டாட்சியர் திரு.கராஜ்குமார் மற்றும் அலுவலக உதவியாளர் திரு.P.ரமேஷ் என்பவரையும் தனித்தனியாக விசாரணை செய்து சோதனை செய்ததில் அவர்கள் வைத்திருந்த தொகைக்கு சரியான முகாந்திரம் கூறியதால் அந்த தொகைகள் அவரவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்ட விவரம் பின்வறுமாறு:

வ. எண்	பெயர், பதவி மற்றும் முகவரி	திரும்ப ஒப்படைக்கப்பட்ட ரூபாய்
1.	திரு.கராஜ்குமார், வட்டாட்சியர், நாகப்பட்டினம்	220/-
2.	திரு.P.ரமேஷ், அலுவலக உதவியாளர்	370/-
	கூடுதல்	490/-

வட்டாட்சியர் அறையின் வடக்கு பக்கம் உள்ள அலுவலக அறையில் இருந்தவர்களையும், சமூக பாதுகாப்புத்திட்ட தனிவட்டாட்சியர் அலுவலக அறையில் இருந்தவர்களையும், இ-சேவை மையத்தில் இருந்தவரையும் தனித்தனியாக விசாரணை செய்து சோதனை செய்ததில் அவர்கள் வைத்திருந்த தொகைக்கு சரியான முகாந்திரம் கூறியதால் அந்த தொகைகள் அவரவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்ட விவரம் பின்வறுமாறு:

வ. எண்	பெயர், பதவி மற்றும் முகவரி	திரும்ப ஒப்படைக்கப்பட்ட ரூபாய்
1.	திரு.எம்.கிருஷ்ணன், மண்டல துணை வட்டாட்சியர்	500/-
2.	திருமதி.எம்.சுபைதா, முதுநிலை வருவாய் ஆய்வாளர் அ 3 பிரிவு	500/-
3.	திரு.கோ.பிரவீன்குமார், இளநிலை வருவாய் ஆய்வாளர், அ1 பிரிவு	120/-
4.	திருமதி.மை.ஜான்சி, முதுநிலை வருவாய் ஆய்வாளர்அ 2 பிரிவு	-
5.	திருமதி.ச.வினிதா, இளநிலை வருவாய் ஆய்வாளர், அ5 பிரிவு	20/-
6.	திரு.ரா.நாகூர்கனி இளநிலை வருவாய் ஆய்வாளர், அ7 பிரிவு	50/-
7.	திரு.மா.தமிழ்ச்செல்வன் முதுநிலை வருவாய் ஆய்வாளர், ஆ1 பிரிவு	-
8.	திருமதி.சு.அனுசுயா, இளநிலை வருவாய் ஆய்வாளர், ஆ2 பிரிவு	-
9.	திருமதி.K.கிருஷ்ணப்பிரியா, முதுநிலை வருவாய் ஆய்வாளர், ஆ3 பிரிவு	-
10.	திருமதி.பொன்.பிரியதர்ஷினி, சரக வருவாய் ஆய்வாளர், திருமருகல்	670/-
11.	திரு.ஆ.சேக்தாவூத், அலுவலக உதவியாளர்	1,160/-
12.	திரு.க.சத்தியமூர்த்தி, ஈப்பு ஓட்டுநர்	100/-
13.	திருமதி.ரா.அபிராமி, Technical Assistant, Census 2027	20/-
14.	திருமதி.மு.குமுதா, சரக வருவாய் ஆய்வாளர், திருக்கண்ணபுரம்	420/-
15.	திரு.ர.முத்துக்குமார், பதிவுரு எழுத்தர்	160/-
16.	திரு.ச.ரெத்தினவேல்பாண்டியன், வருவாய் ஆய்வாளர், கங்களாஞ்சேரி	540/-
17.	திரு.ஜெ.மணிகண்டன் கிராம நிர்வாக அலுவலர், கருவேலங்கடை	1,880/-
18.	திரு.செ.சுந்தரமூர்த்திசெல்வம், கிராம நிர்வாக அலுவலர், ஐவநல்லூர்	-
19.	திரு.ப.ராஜா, கிராம உதவியாளர், வடவூர்	60/-
20.	திரு.செ.விக்னேஷ், தற்காலிக தட்டச்சர்	150/-
	கூடுதல்	6,350/-

முதல் தளத்தில் உள்ள சமூக பாதுகாப்பு தனி வட்டாட்சியரையும், வட்ட வழங்கல் அலுவலரையும், நிலஅளவை பிரிவு அலுவலர்களையும், தேர்தல் பிரிவு அலுவலர்களையும் மற்றும் பொதுமக்களையும் தனித்தனியாக விசாரணை செய்து சோதனை செய்ததில் அவர்கள் வைத்திருந்த தொகைக்கு சரியான முகாந்திரம் கூறியதால் அந்த தொகைகள் அவரவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்ட விவரம் பின்வறுமாறு:

வ. எண்	பெயர், பதவி மற்றும் முகவரி	திரும்ப ஒப்படைக்கப்பட்ட ரூபாய்
1.	திருமதி.த.கிரிஜாதேவி, தனிவட்டாட்சியர், சமூக பாதுகாப்பு திட்டம்	450/-
2.	திருமதி.அ.இக்பால்நிஷா, வட்ட வழங்கல் அலுவலர்	70/-
3.	திரு.S.மனீஷ், முதுநிலை வருவாய் ஆய்வாளர், வட்ட வழங்கல் அலுவலகம்	220/-
4.	திரு.அ.கலீல் ரஹ்மான், வட்ட துணை ஆய்வாளர், நில அளவை பிரிவு	150/-
5.	திரு.ச.அஜீத்குமார், புல உதவியாளர், நில அளவை பிரிவு	20/-
6.	திரு.அ.அப்துல்காதர், வரைவாளர், நில அளவை பிரிவு	50/-
7.	திரு.பா.பாஸ்கரன், நில அளவையர், நில அளவை பிரிவு	450/-
8.	திரு.ரா.தமிழரசன், புல உதவியாளர்	200/-
9.	திரு.க.கார்த்தி, முதுநிலை வருவாய் ஆய்வாளர், தேர்தல் பிரிவு	-
10.	திருமதி.ரா.ரம்யா, Data Entry Operator, தேர்தல் பிரிவு	130/-

11.	திருமதி.க.மகேஷ்வரி, Data Entry Operator, இ-சேவை மையம்	300/-
12.	திரு.சி.பாண்டியன், த/பெ.சின்னையன், வடக்குதெரு, முட்டம்	400/-
13.	திருமதி.ம.செல்வகுமாரி, க/பெமரியதாஸ், மேலத்தெரு, சிக்கல்	1,150/-
14.	திருமதி.ஹபியுதீன், க/பெ.செய்யதுமுபாரக், தெற்குதெரு, திட்டச்சேரி	3,000/-
15.	திருமதி.சு.கலைவாணி, க/பெ.சுரேஷ், காலனிதெரு, பெருங்கடம்பனூர்	1,600/-
16.	திரு.இ.மோகன், த/பெ.இடும்பையன், தெற்குதோப்பு, செம்பியன்மகாதேவி	630/-
17.	திரு.கா.விஜயகங்கன், த/பெ.காசிநாதன், பெரியநரியங்குடி	120/-
18.	திரு.ச.வெற்றி, த/பெ.சக்திவேல், திடீர்குப்பம், அக்கரைப்பேட்டை	3,500/-
19.	திருமதி.அ.சண்முகபிரியா, க/பெ.அப்பப்பன், குன்றுகுளம், வடகரை	20/-
20.	திரு.ரா.சுப்புரத்தினம், த/பெ.ராமமூர்த்தி, ஜியபுரம், திருச்சி	2600/-
கூடுதல்		15,060/-

இந்த திடீர் ஆய்வின் போது சரியான முகாந்திரம் கூறிய மொத்தத் தொகை ரூபாய் 21,900/- அவரவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் மேற்கண்ட அலுவலர்களின் "G" Pay கணக்குகளை சரிபார்த்தபோது, திரு.க.ராஜ்குமார், வட்டாட்சியர் என்பவரது செல் எண். 9943851954 ஐ சோதனை செய்த போது அவரது "G" Pay கணக்கிற்கு 01.03.2026 முதல் 27.08.2026 வரை திரு.குமரன், துணை வட்டாட்சியர், தேர்தல் பிரிவு, வட்ட அலுவலகம், நாகப்பட்டினம்(செல் எண் 9095423419), திரு.நிவாஸ் (செல் எண் 8825580420), திரு.ராமலிங்கம் (செல் எண் 8124354599) மற்றும் சிலரது கணக்கிலிருந்து மொத்தம் ரூபாய் 1,92,538/- பணம் வந்துள்ளது. அதேபோல் திரு.எம்.கிருஷ்ணன், மண்டல துணை வட்டாட்சியர் என்பவரது செல் எண்.7200666807 ஐ சோதனை செய்த போது அவரது "G" Pay கணக்கிற்கு 16.10.2025 முதல் 27.08.2026 வரை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர்களின் கணக்கிலிருந்து மொத்தம் ரூபாய் 1,20,250/- பணம் வந்துள்ளது. மேற்கண்ட தொகை நாகப்பட்டினம் வட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலக அலுவலர்கள் பிறப்பு இறப்பு சான்று பெற வரும் நபர்களிடமும், வண்டல் மண் எடுக்க அனுமதி வேண்டி வரும் விண்ணப்பதாரர்களிடமும், பட்டா மாற்றம், உட்பிரிவு மற்றும் நிலஅளவை தொடர்பான விண்ணப்பித்துள்ள நபர்களிடமும் மற்றும் நாகப்பட்டினம் வட்ட வருவாய் ஆய்வாளர்களிடம், கிராம நிர்வாக அலுவலர்களிடமும் குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டு கேட்டு பெற்றதாக கருதி அதன் விபரம் திடீர் ஆய்வு நடவடிக்கைகள் மகஜரில் பதிவு செய்யப்படுகிறது. மேலும் அலுவலகத்தில் இருந்து வருகை பதிவேடுகள் மற்றும் பொதுமக்களின் மனுக்கள் தொடர்பான நிலுவை விவரங்கள் குறித்த ஆவணங்கள் குறித்து கேட்க, (1) பட்டா மாற்றத்திற்காக 66 மனுக்களும், பட்டா உட்பிரிவுக்காக 141 மனுக்களும் நிலுவையில் உள்ளதாக அதுதொடர்பான மனுக்களின் விவரங்களை கணினியில் பதிவிறக்கம் செய்து வட்டாட்சியர் சான்றொப்பமிட்ட 3 பக்க அறிக்கை, (2) வண்டல் மண் எடுக்க அனுமதி கொடுப்பது தொடர்பாக 37 நபர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்ட விபரமும், 87 நபர்களுக்கு அனுமதி மறுத்த விபரமும், 91 நபர்களுக்கு அனுமதி நிலுவையிலுள்ள விபரமும் கொண்ட வட்டாட்சியர் சான்றொப்பமிட்ட 8 பக்க அறிக்கை, (3) எல்லை நில அளவீடு தொடர்பாக ஊரக புல எல்லை அளத்தல் தொடர்பான 142 மனுக்களும், நகர்புர குடியிருப்பு பகுதியில் 63 மனுக்களும் நிலுவையிலுள்ளது தொடர்பான வட்டாட்சியர் சான்றொப்பமிட்ட 2 பக்க அறிக்கை, (4) சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 45 மனுக்கள் நிலுவையிலுள்ளது தொடர்பான தனிவட்டாட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) சான்றொப்பமிட்ட 2 பக்க

அறிக்கை, (5) புதிய குடும்ப அட்டை தொடர்பான 583 மனுக்களும், உறுப்பினர் சேர்க்கைக்காக 34 மனுக்களும், குடும்ப தலைவர் உறுப்பினர் மாற்றத்திற்காக 15 மனுக்களும், குடும்ப உறுப்பினர் நீக்கத்திற்காக 39 மனுக்களும் நிலுவையிலுள்ளது தொடர்பான வட்ட வழங்கல் அலுவலர் சான்றொப்பமிட்ட 1 பக்க அறிக்கை, (6) நாகப்பட்டினம் வட்டாட்சியர் அலுவலக 2026 ஆம் ஆண்டு வருகை பதிவேடு, (7) நாகப்பட்டினம் வட்டாட்சியர் அலுவலக தனிநபர் ரொக்க பணம் கையிருப்பு பதிவேடு 2026 திடீர் சோதனை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் ஆய்வின்போது நாகப்பட்டினம் வட்டாட்சியர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்ட நாகப்பட்டினம் வட்டாட்சியர் அலுவலக தனிநபர் ரொக்க பணம் கையிருப்பு பதிவேடு 2026 ஆனது 20.08.2026 ஆம் தேதிக்கு பிறகு எந்தவித பதிவுகளும் வட்டாட்சியர் அலுவலக அலுவலர்களால் பதிவு செய்யாப்படாமல் உள்ளது. இந்த திடீர் ஆய்வின் முடிவில் (1) திரு.கா.ராஜ்குமார், வட்டாட்சியர், நாகப்பட்டினம், (2) திரு.எம்.கிருஷ்ணன், மண்டல துணை வட்டாட்சியர், வட்ட அலுவலகம், நாகப்பட்டினம் ஆகியோர்களை மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் அவர்கள் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். இந்த திடீர் சோதனை செயல்முறைகள் இன்று **27.08.2026** ஆம் தேதி இரவு **2130** மணிக்கு முடிக்கப்பட்டது. திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜரின் ஒவ்வொரு பக்கத்திலும் கையொப்பங்கள் இடப்பட்டுள்ளது. Hon'ble Sir, Submitted Received the Computer typed complaint on 28.08.2026 at about 10.00 hours, after getting suitable instructions from the Superior Officers and Law Officers of DVAC, Chennai, I am registering a case in Nagapattinam Vigilance and Anti-Corruption **Cr.No.08/2026**, U/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 at **14.00** hours on **28.08.2026**.

28.08.2026

(G.RAMESH KUMAR)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Nagapattinam.

Original FIR along with the Original complaint of Tr.M.Gunasekaran, Inspection Cell Inspector, District Inspection Cell Office, Thanjavur, Surprise Check Proceedings cum Mahazar, Statement of 1) Tr.G.Rajkumar, Tahsildar, Nagapattinam and 2) Tr.M.Krishnan, Zonal Deputy Tahsildar, Taluk Office, Nagapattinam are submitted to the Hon'ble Principal District and Sessions Judge, Nagapattinam, copy of the FIR will be submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai and a copy filed in the CD file.

28.08.2026

(G.RAMESH KUMAR)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Nagapattinam.